பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

12 11 2025 6 45

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு காரணமாக கடந்த இரண்டு மாதங்களில் 6 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்கள் விற்பனையாகி இருப்பதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

2. காசி தமிழ்ச் சங்கமம், தமிழகத்திற்கும் - காசிக்கும் இடையிலான ஆன்மிகம் மற்றும் கலாச்சார உறவுகளுக்கு புத்துயிரூட்டி இருப்பதாக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

4. வணிக வரி மற்றும் பத்திரப் பதிவு வருவாய் அதிகரித்துள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. உலகக்கோப்பை செஸ் போட்டியின் 4வது சுற்று முதல் ஆட்டத்தில் இந்தியாவின் பிரக்ஞானந்தா வெற்றி பெற்றுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி குறைக்கப்பட்டதன் காரணமாக செப்டம்பர் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையிலான காலத்தில் 6 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்களை மக்கள் வாங்கியிருப்பதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

கோவையில் வணிகர் சங்க பேரமைப்பின் சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பேசிய அவர், வரி குறைப்பு, வணிகர்களுக்கு நேரடி பயனை அளித்துள்ளதாக கூறினார்.

(Voice Byte - Nirmala Sitaraman - 55 Sec)

<<<<>>>>

நாட்டில் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த தரக் கட்டுப்பாடும் தொழில் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை மேலும் எளிமைப்படுத்துவதும் அவசியம் என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் மாநாடு ஒன்றில் பேசிய அவர், தொழில் தொடங்குவதற்கு தேவையான நிலம், கட்டமைப்பு வசதி, ஊக்கத்தொகை, ஊழலற்ற நிர்வாகச் சூழல், குறிப்பிட்ட கால

வரம்பிற்குள் அனுமதியளித்தல் போன்றவற்றின் மூலமே தொழில்துறையில் ஆரோக்கியமான போட்டிச் சூழலை ஊக்குவிக்க முடியும் என்றார்.

இந்திய தொழில் நிறுவனங்கள் உலக அளவிலான வாய்ப்புகளைப் பெறுவதில் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<<<<>>>>

காசி தமிழ்ச் சங்கமம், தமிழகத்திற்கும் - காசிக்கும் இடையிலான ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான ஆன்மிகம் மற்றும் கலாச்சார உறவுகளுக்கு புத்துயிரூட்டி இருப்பதாக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.

சென்னை ஐ.ஐ.டி.யில் நடைபெற்ற காசி தமிழ்ச் சங்கமம் நான்காம் பதிப்பின் முன்னோட்ட விழாவில் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையால் நடத்தப்படும் காசி தமிழ்ச் சங்கமம், நாட்டின் வாழும் நாகரிக பாரம்பரியத்தை வீரியத்துடன் கொண்டாடுவதாக உள்ளது என்று கூறினார்.

நாடு முழுவதும் உள்ள தமிழர் அல்லாத பின்னணியைச் சேர்ந்த மக்கள் குறிப்பாக இளைஞர்கள் தமிழ் மொழியை ஆர்வத்துடன் கற்றுக்கொண்டு அதன் ஆழமான இலக்கியம் மற்றும் கலாச்சார பாரம்பரியம் குறித்து ஆராய்ச்சி செய்து வருவதையும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்போரின் உற்சாகம் ஒரே பாரதம்-உன்னத பாரதம் என்ற உணர்வுடன் தேச நிர்மாணத்திற்கான

கூட்டு அர்ப்பணிப்பை பிரதிபலிப்பதாகவும் திரு. ஆர்.என். ரவி தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், திருச்சியில் தமிழக முதலமைச்சர் தங்கியிருந்த சுற்றுலா மாளிகைக்கு அருகில் உள்ள காவலர் குடியிருப்புக்குள் புகுந்து இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேபோன்று விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே கோயில் காவலர்கள் இருவர் கொலை செய்யப்பட்டிருப்பதும்

சட்டம்-ஒழுங்கு சீரழிவிற்கு உதாரணம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் காவல்துறை செயல்படுகிறதா என்ற அச்சத்துடனேயே மக்கள் இருப்பதாக கூறியுள்ள டாக்டர் எல். முருகன், காவல்துறைக்கு பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், இதுபோன்ற பிரச்சினைகள் குறித்து கவலையின்றி இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் வணிக வரி மற்றும் பத்திரப் பதிவு வருவாய் அதிகரித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. மூர்த்தி தெரிவித்துள்ளார்.

விழுப்புரத்தில் தமது துறை அதிகாரிகள் பங்கேற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், கடந்த 2021ஆம் ஆண்டு கிடைத்த

வருவாயை விட இந்த ஆண்டு பன்மடங்கு அதிகரித்துள்ளதாக கூறினார்.

அதிகாரிகள் தங்களுக்கான இலக்குகளை அடைய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும் பொதுமக்களுக்கான சேவைகளை எளிமைப்படுத்தி வருவாயை மேலும் அதிகரிக்கச் செய்யும் வகையில் பணியாற்றுமாறும் அதிகாரிகளுக்கு அமைச்சர் திரு. மூர்த்தி அறிவுறுத்தினார்.

<<<<>>>>

பிரதமரின் PRANAM திட்டத்தின்கீழ் விவசாயிகள் ரசாயன உர பயன்பாட்டைக் குறைத்து இயற்கை உரங்களைப்

பயன்படுத்துவது குறித்த கருத்தரங்கம் செங்கல்பட்டு மாவட்டம் பவுஞ்சூர் பகுதியில் நடைபெற்றது.

இதில் பங்கேற்றுப் பேசிய மதராஸ் ஃபெர்டிலைசர்ஸ் நிறுவனத்தின் வர்த்தகப் பிரிவு கூடுதல் மேலாளர் திரு. பாஸ்கரன் இயற்கை உரப் பயன்பாட்டால் ஏற்படும் நன்மைகளை எடுத்துரைத்தார்.

(Voice Byte – Baskaran – 39 Sec)

இந்த கருத்தரங்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது என்று விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

(Voice Byte – Janarthanan – 15 Sec)

<<<<>>>>

சபரி மலை ஐயப்பன் கோவில் மண்டல மற்றும் மகரவிளக்கு பூஜைகளை முன்னிட்டு பக்தர்களின் வசதி மற்றும் பாதுகாப்பிற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இரு மாநில அதிகாரிகளும் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

தேக்கடியில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தேனி மாவட்ட ஆட்சியர் திரு. ரஞ்சித் சிங், இடுக்கி மாவட்ட ஆட்சியர் திரு. தினேசன் சேருவாட் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

***<u>இருவரிச் செய்திகள்</u>***

ஜப்பான் அரசின் வர்த்தக தடை நடவடிக்கைகளுக்கு பதிலடியாக அந்நாட்டு வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் உள்ளிட்ட 30 பேர் ரஷ்யாவுக்கு வர தடை விதிக்கப்பட்டுள்ளது.

------------

வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிடா, ஹவானாவில் கியூபா அதிபர் திரு. Miguel Bermudez-ஐ சந்தித்துப் பேசியுள்ளார்.

------------

இலங்கையில் இந்திய நிதியுதவி உடனான சமுதாக மேம்பாட்டுத் திட்டங்களை மேலும் 5 ஆண்டுகளுக்குத் தொடர இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன.

------------

பிஹார் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற இரண்டாம் கட்டத் தேர்தலில் 69 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகள் பதிவாகியுள்ளது.

------------

தூத்துக்குடி மாவட்டத்தில் பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சாகர் மித்ரா எனப்படும் பல்நோக்கு சேவை ஊழியர்களாக பணியாற்ற விரும்புவோர் வரும் 17ஆம் தேதிக்குள் மீன்வளத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திரு. இளம் பகவத் கேட்டுக்கொண்டுள்ளார்.

------------

முன்னாள் அமைச்சர் திரு. பொன்முடி மீதான செம்மன் குவாரி வழக்கு விசாரணையை விழுப்புரம் மாவட்ட நீதிமன்றம் இம்மாதம் 24ஆம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளது.

------------

இரிடியம் விற்பனை மூலம் வெளிநாட்டில் இருந்து பணம் கிடைக்கும் என்ற மோசடியை நம்பி பொதுமக்கள் யாரிடமும் பணம் கொடுத்து ஏமாற வேண்டாம் என்று தமிக காவல்துறையின் சிபிசிஐடி பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

------------

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டப்பேரவைத் தொகுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை ஆட்சியர் திரு. கமல் கிஷோர் ஆய்வு செய்தார்.

------------

சென்னை கொளத்தூர் பெரியார் நகரில் அமைக்கப்பட்டு வரும் முதல்வர் படைப்பகப் பணிகளை மாநில அமைச்சர் திரு. சேகர் பாபு நேற்று ஆய்வு செய்தார்.

------------

சென்னை மாநகரில் தற்காலிக கொடிக்கம்பங்களை நடுவதற்கு மாநில அரசால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகப் பின்பற்றி உரிய அனுமதி பெற வேண்டும் என்று மாநகராட்சி ஆணையர் திரு. குமரகுருபரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை செஸ் போட்டியின் 4வது சுற்று முதல் ஆட்டத்தில் இந்தியாவின் பிரக்ஞானந்தா வெற்றி பெற்றுள்ளார்.

பனாஜியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் அவர் ரஷ்யாவின் Daniil Dubov-ஐ வென்றார்.

அர்ஜுன் எரிகைசி, ஹரிகிருஷ்ணா மற்றும் கார்த்திக் வெங்கட்ராமன் ஆகிய மூவரும் தங்களது ஆட்டங்களை டிரா செய்தனர்.

<<<<The End>>>>